**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.276/2022**

**வா.சா. –1–நாகம்மாள்**

**நாள். 06.11.2023**

**சாட்சி மீண்டும் அழைத்து, சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பச்சையம்மாள் என்பவரை எப்படி தெரியும் என்றால், புரோக்கர் மூலமாக தெரியும். அவரை 2 வருடங்களாக தெரியும். என் பெயரில் வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. IOB வங்கி, திண்டுக்கல் பொன்னகரம் கிளையில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது. 20.11.2017 ம் தேதி என் வங்கி கணக்கில் ரூ.7,50,000/– இருந்ததா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் 09.06.2006 ம் தேதி வழக்கு சொத்தை பதிவு கிரையம் மூலமாக பிரதிவாதி பெற்றுக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். என் பிராதின் 4 வது பாரா, நிருபண வாக்குமூலத்தின் 2 வது பாராவில் நான் ரூ.7,50,000/– பிரதிவாதிக்கு மொத்தமாக கொடுத்து ஒப்பந்தம் எழுதிக்கொண்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஒப்பந்தத்தில் (வா.சா.ஆ.1 ) மேற்படி விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் "நம்மில் 2 வது நபர், நாளதுதேதியில் நம்மில் 1 வது நபருக்கு ரூ.7,50,000/–ஐ அட்வான்சாக ஏற்கனவே பல தவணைகளில் ரொக்கம் பெற்றுக்கொண்டு" என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு சொல்லப்படவில்லை, அவ்வாறு சொல்லியிருந்தால் அந்த ஒப்பந்தம் தவறு. 09.11.2006 ம் தேதியில் வழக்கு சொத்தை பிரதிவாதி கிரையம் பெற்றுக்கொண்டார் என்ற விபரத்தை என் பிராது, நிருபண வாக்குமூலம், நோட்டீசில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 20.11.2017 ம் தேதி நான், பிரதிவாதியிடம் கிரையத்தொகை ரூ.7,50,000/–ஐ கொடுக்கவில்லை என்றும், அதை பிரதிவாதி பெற்றுக்கொள்ளவில்லை என்றும் சொல்வது சரியல்ல. ரூ.7,50,000/– ஐ எந்தெந்த தேதியில் எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் நான் அவ்வாறு கொடுக்கவில்லை, ஒரே தவணையாக ரூ.7,50,000/– பிரதிவாதியிடம் கொடுத்தேன். கிரைய ஒப்பந்தத்தில் மீதி கிரையத்தொகை ரூ.1,00,000/–ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும் என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் வைப்பீடு செய்தது தாவா கிரைய ஒப்பந்தத்திற்கு விரோதமானது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் "Time is essence of contract" என்று பேசப்படவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. 20.11.2017 ம் தேதி கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு நான், பிரதிவாதியை எப்போது பார்த்தேன் என்றால் 20 மாதம் கழித்து சென்று கேட்டேன். எந்தெந்த தேதிகளில் போனேன், எத்தனை முறை போனேன் என்றால் தேதி ஞாபகமில்லை, 4,5 தடவை போனேன். நான் உண்மையில் அவ்வாறு 4,5 தடவை போயிருந்தால், எனது அறிவிப்பு, வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் இந்த விபரத்தை சொல்லியிருப்பேன் என்றும், அவ்வாறு சொல்லவில்லை என்பதால் நான் பிரதிவாதியை சந்திக்கவில்லை என்பது சரியல்ல. பிரதிவாதி இரும்பு பெட்டி கம்பெனி நடத்தி வருகிறார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.11.06 15:56:52 +0530

Additional District Judge,

Dindigul.